## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண்.191/2021** **நாள். 23.01.2024**

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபாலன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ராமசந்திரன் | சாதி | |
| கிராமம் | பாலப்பட்டு | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 64 |

**ம..சா.1**

**குறுக்கு விசாரணை**

17.01.2020 தேதி பகல் 11.30 மணிக்கு விபத்து நடந்தது. விழுப்புரம் செஞ்சி ரோட்டில் பாலப்பட்டு கூட்ரோட்டில் பாக்கியலட்சுமி என்பவர் வீட்டிற்கு எதிரில் விபத்து நடந்தது. என் அம்மா பாக்கியலட்சுமி அருகில் நின்று பேசி கொண்டிருந்த போது ஆட்டோ வந்து அவர் மீது மோதிவிட்டது. ஆட்டோவின் பதிவு எண். TN 07 CF 8222 ஆகும். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து ஜெயபால் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். என் அம்மா முதலில் செஞ்சி அரசு மருத்துவமனைக்கும், பிறகு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் 4, 5 நாட்கள் சிகிச்சை பெற்றார். மருத்துவர்கள் என் அம்மா வயதானவர் என்பதால் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யமுடியாது என்று சொன்னார்கள் அதனால் நாங்கள் என் அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்து சிகிச்சை செய்தோம். ம.சா.ஆ. 4 ஆவணத்தில் நாங்கள் சொன்னதன் பேரில் என் அம்மாவை மருத்துவர்கள் சிகிச்சையில் இருந்து விடுவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மருத்துவர்கள் சொன்னதால் தான் நாங்கள் அழைத்து வந்தோம். என் அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்து சித்தேரியில் 4 முறை நாட்டு கட்டு போட்டோம். மருத்துவமனையில் இருந்து வந்ததில் இருந்து என் அம்மா படுத்த படுக்கையாக இருந்தார். 4 கட்டு போட்ட பிறகு என் அம்மாவிற்கு உடல் நிலை சரியாகவில்லை படுத்த படுக்கையாக தான் இருந்தார். பின்னர் 09.04.2020 அன்று என் தாயார் இறந்துவிட்டார்.

II. என் தாயார் மருத்துவமனையில் இருந்து வந்து 4 மாதம் கழித்து இறந்துவிட்டார் . பின்னர் அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் என் தாயாருக்கு பிரேதய பரிசோதனை செய்தோம். விபத்து சம்பந்தமாக போலிசில் நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து சம்பந்தமாக போலிசார் ஊரில் வந்து விசாரித்தார். விபத்து சம்பந்தமாக போலிசார் என்ன மேல்நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. போலிசார் என் தாயாருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் என் தாயார் இறந்துவிட்டதாக போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்ததிலிருந்து என் அம்மா இறக்கும் வரை பெற்ற தொடர் சிகிச்சைக்கான விவரங்களையும் , ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அம்மாவின் வயது , வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் கோரியுள்ள ரூ. 10 லட்சம் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் எனது அக்கா, 3, 4 மனுதாரர்கள் எனது தங்கைகள். எனது சகோதிரிகள் திருமணத்திற்கு பிறகு அவர்களின் கணவர் வீடுகளில் வசித்து வருகிறார்கள். என் அம்மாவின் வருமானத்தை நம்பி அவர்கள் இல்லை. விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் என் அம்மா இறந்தார் என்பதை நி்ருபிக்காததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண்.191/2021** **நாள். 23.01.2024**

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபால் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வீரபத்திரன் | சாதி | |
| கிராமம் | பாலப்பட்டு | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 57 |

**ம..சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-2 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா.2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

ஆவணங்கள் எதுவும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

நான் செஞ்சி - விழுப்புரம் சாலையில் பாலப்பட்டு கூட்ரோட்டில் டீ கடை வைத்துள்ளேன். 17.01.2020 தேதி பகல் 11.30 மணிக்கு பாக்கியலட்சுமி வீட்டிற்கு எதிரே விபத்து ஏற்பட்டது. ஆண்டாள் என்பவர் பாக்கியலட்சுமி வீட்டு அருகே நின்று கொண்டிருந்தார் . அவர் மீது பாலப்பட்டில் இருந்து வந்த ஆட்டோ மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்ட போது நான் கடையில் நின்று கொண்டிருந்தேன். விபத்தில் அடிப்பட்ட ஆண்டாளை தூக்கி தண்ணிர் கொடுத்து அவரின் உறவினருக்கு தகவல் சொன்னேன். ஆட்டோவின் பதிவு எண் எனக்கு தெரியாது. ஆட்டோ பாலபட்டு கிராமத்திற்கு சொந்தமானது. அடிப்பட்ட வரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்தில்

ஆண்டாளுக்கு இடுப்பு , தொடை எலும்பு முறிந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்து சம்பந்தாக போலிசார் என்னை விசாரித்தார்கள். வரைபடம் தயார் செய்தார்கள். அதில் கையெழுத்து வாங்கினார்கள். விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை.

**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 191/2021** **நாள். 23.01.2024**

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ம் நாள் மனுதாரர் தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மூர்த்தி | தொழில் | |
| த. பெ./க.பெ. | குப்புசாமி | சாதி | |
| கிராமம் | பாலப்பட்டு | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 33 |

**ம..சா.3**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-3ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 3 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

ஆவணங்கள் எதுவும் இல்லை.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்து போன ஆண்டாள் என்பவர் எனது பாட்டி ஆவார். விபத்தில் அடிப்பட்ட ஆண்டாளை நானும் , என் அம்மா அஞ்சலை தேவியும் ஆம்புலன்ஸ் மூலம் செஞ்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு ஆம்புலன்ஸ் மூலம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அழைத்து சென்றோம். என் பாட்டி ஆண்டாளை மருத்துவமனையில் உடன் இருந்து நான் தான் பார்த்து கொண்டேன். விபத்தில் என் பாட்டிக்கு வலது கால் தொடை எலும்பும், மணிகட்டு எலும்பும் முறிந்துவிட்டது. நாங்களாக தான் என் பாட்டியை மருத்துவமனையில் இருந்து அழைத்து வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. மருத்துவர்கள் என் பாட்டிக்கு 80 வயது ஆனதால் குணமாவதற்கு வாய்ப்பு குறை என்று சொன்னார்கள். என் பாட்டியை வீட்டிற்கு அழைத்து

வந்து பாலப்பட்டில் உள்ள வீட்டில் வைத்து பார்த்து கொண்டோம். என் பாட்டிக்கு நாட்டு கட்டு போட்டோம். அதன் பிறகு அவர் எழுந்து நடக்கவில்லை. என் பாட்டிணை நானும், என் அம்மாவும் கடைசி வரை பார்த்துக்கொண்டோம். என் பாட்டியை தொடர்ந்து சிகிச்சை அளித்திருந்தால் அவர் பிழைப்பதற்கு வாய்புண்டு என்றாலும் நாங்களாகவே வீட்டிற்கு அழைத்து வந்து சரியாக சிகிச்சை அளிக்காததால் தான் அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.